பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து;
அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (நீதி-22.6)

Published By

Kids For Christ Ministries

244, Uthukuli Road, Kunnathur, Tirupur - District, Tamilnadu.
Ph : 04294 - 263230, Mob : +91 98655 87888
E-mail : samdjebaraj@gmail.com

Kids

for Christ

பிகினர் - ஒரு வருடத்திற்க்கான பாடத்திட்டம் : VOL-1

எமது தரிசனங்களும் ஊழியங்களும்

1.	திருச்சபைகளை ஸ்தாபித்தல்	6.	வேதபாட வகுப்புகள்
2.	ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி	7.	கிறிஸ்தவ இலக்கிய ஊழியங்கள்
3.	விடுமுறை வேதாகம பள்ளி பயிற்சி	8.	சபை வளர்ச்சி கருத்தரங்கு
4.	வாலிபர் ஊழிய பயிற்சி	9.	குடும்ப ஆசீர்வாத முகாம்
5.	சீஷத்துவ பயிற்சி	10.	சுவிசேஷக் கூட்டங்கள்

ஞாயிறு பள்ளி மாணவர் புத்தகங்கள் & ஆசிரியர் கையேடுகள்

Super Book

Sunday School Stories

Super Songs

Sunday School Songs

Contact +91 9865587888, +91 7397497273

Kids For Christ

ஞாயிறு பள்ளி ஆசிரியர் கையேடு

பிகினர் வகுப்பு

பெயர் : .....

சபை : .....

ஊர் : .....

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே
அவனை நடத்து;
அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.(நீதி-22:6)

Copyright @ COGM

Title	: Beginner Teacher's Guide - Vol:1
Language	: Tamil
First Edition	: January 2025
Bible Verses	: Tamil Bible OV
Published by	: Kids For Christ Ministries
Designed by	: Pr. SAM D JEBARAJ & Bro. BEN S GLADSON

All rights reserved

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical including photocopying, recording or any information storage and retrieval system in this books without permission in writing from publisher.

Kids For Christ Ministries
Tirupur - 638 103
Tamilnadu, South India
Ph: 9865587888, 7397497273

Contact +91 9865587888, +91 7397497273

மாணவர் பயிற்சி புத்தகங்கள்

Volume - 2

Section	Classes	Age
1. Kinder	LKG & UKG	4 -5
2. Beginner	1st & 2nd	6-7
3. Primary	3rd & 4th	8-9
4. Junior	5th & 6th	10-11
5. Inter	7th & 8th	12-13
6. Teen	9th & 10th	14-15
7. Senior	11th & 12th	16-17

ஆசிரியர் குறிப்பு

Contact +91 9865587888, +91 7397497273

அன்பான ஆசிரியர்களே .....

நீங்கள் **Beginner (பிகினர்)** வகுப்பின் ஆசிரியராக பிள்ளைக ளுக்கு வேதபாடங்களை போதிக்க முன்வந்தமைக்காக உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறோம். இப்பிரிவு பிள்ளை களுக்குப் போதிக்கும் முன்பாக மிகுந்த ஜெபத்தோடு பாடங்களை ஆயத்தம் செய்யுங்கள். இந்த கனமான ஊழியத்தில் நீங்கள் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட கர்த்தரின் கரங்களில் உங்களை அர்ப்பணியுங்கள்.

எனது கடமை போதிப்பது மட்டுமே என்று இல்லாமல், நீங்கள் போதிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் பிள்ளைகள் வேதத்தை நன்கு அறிந்து, ஆவிக்குரிய நல் அனுபங்களை பெற்றுக் கொள்ள காரணமாய் இருக்கவேண்டும். நீங்கள் கற்பிக்கும் பாடங்கள், வசனங்கள் பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்க கூடியதாகவும், அவர்கள் இருதயத்தை ஊடுருவிச் செல்ல கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பிள்ளைகள் நீங்கள் போதிக்கும் வார்த்தைகளை மட்டும் அல்ல. போதிக்கும் ஆசிரியரின் வாழ்க்கையையும் கவனிக்கும் திறன் உடையவர்கள். ஆகவே நமது சொல்லிலும், செயலிலும் இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும். உங்கள் போதனைகள் எளிதாக புரிந்து கொள்ளும் விதத்தில் உதாரணங்கள் மற்றும் உவமைகளை உள்ளடக்கியிருக்கட்டும். மிகுந்த பாரத்தோடும், ஜெபத்தோடும் நீங்கள் செய்கிற இந்த சிறுவர் ஊழியத்திலே நீங்கள் பெரிய ஆத்தும அறுவடையை காண்பீர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் இந்த ஊழியங்களில் எடுக்கின்ற எல்லா பிரயாசங்களையும், முயற்சி களையும் நமது ஆண்டவர் தாமே ஆசிர்வதிப்பாராக! ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

சாம் டி ஜெபராஜ்

"As I was with Moses, so I will be with you." Joshua 1:5.

Jesus Redeems MINISTRIES

Nalumavadi - 628 211, Tuticorin District

Office: 04639 220022 Fax: 04639 - 220033

Mohan C. Lazarus

அணிந்துரை!

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்!

'ஞாயிறு பள்ளி ஆசிரியர் **கையேடு', 'ஞாயிறு பள்ளி மாணவர் பயிற்சிப் புத்தகம்'** ஆகிய இவ்விரண்டு புத்தகங்களை வாசித்தபோது, நான் ஆச்சரியப்பட்டுப்போனேன்.

அன்பு பாஸ்டர் **சாம் ஜெபராஜ்** அவர்களுக்கு, கர்த்தரே இந்த தரிசனத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து தேவனைத் துதிக்கிறேன். கர்த்தர் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்ற கடினமாய் உழைத்து, இந்த பாடத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள்.

மகத்துவமான வேதாகமத்திலுள்ள சத்தியங்களை தெளிவாக சிறு பிள்ளைகளுக்கு போதிப்பதற்கு வசதியாக, அவர்களுடைய வயதிற்கேற்ப அவர்களை ஏழு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வயதினரும் வேத வசனத்தின் சத்தியங்களை சுலபமாக புரிந்து கொள்ளும் வண்ணமாக, சிறு பிள்ளைகளின் மனநிலைக்கு ஏற்றவாறு அழகாக இதை வடிவமைத்திருக்கிறார்கள். ஆவியானவரின் துணையில்லாமல் இப்பணியை நிறைவேற்றி இருக்க முடியாது.

இந்த ஞாயிறு பள்ளி மாணவர் பயிற்சிப் புத்தகம் மற்றும் ஞாயிறு பள்ளி மாணவர் கையேடு ஆகிய புத்தகங்களை பயன்படுத்துகிற உங்களை கர்த்தர் விசேஷமாக ஆசீர்வதிப்பார். இதன் மூலமாக ஆயிரமாயிரமான சிறு பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்படுவார்கள்.

இப்புத்தகம் வெளிவருவதற்கு காரணமாக இருந்த பாஸ்டர் அவர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே அளவில்லாமல் ஆசீர்வதிக்கவும், புதிய கிருபைகளைத் தந்து ஊழியத்தின் பாதையில் பயன்படுத்தும்படியாகவும் ஜெபிக்கிறேன்.

"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்." (யோவான் 1:50)

என்ற வேத வசனத்தின்படி பாஸ்டர் அவர்கள் மூலமாக சிறு பிள்ளைகளுக்கென்று இன்னும் அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவரும்படியாக நான் வாழ்த்தி, ஆசீர்வதித்து, ஜெபிக்கிறேன்!

மிகுந்த அன்புடனும், ஜெபத்துடனும்,

உங்கள் சகோதரன்,

Mohan C. L

(மோகன் சி. லாசரஸ்)

Tel: 04639 - 22 00 22 Fax: 04639 - 22 00 33

Email: info@jesusredeems.com Visit us: www.jesusredeems.com/

For 24 hours Prayer help Dial: 04639 - 22 00 00

Contact +91 9865587888, +91 7397497273

கீழ்க்கண்ட படத்திற்கு Colour கொடுக்கவும்:



மேலே கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளும்

பிகினர் (Beginner) மாணவர்

"பயிற்சி புத்தகத்திலிருந்து" எடுக்கப்பட்டவைகள்

குறிப்பு: மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாணவ, மாணவியர்க்கு தேர்வு நடத்தலாம்.

ஞாயிறு சிறுவர் பாடசாலை

மாதிரி வினாத்தாள்

Primary Class

தேர்வு நேரம்: 1 மணி **மதிப்பெண்கள்:50**

I. சிறுவினாக்கள் (5x1=5)

1. பகலை ஆளும் பெரிய சுடர் எது?
2. பேதுரு சிறைச்சாலையில் இருக்கும்போது சபையார் என்ன செய்தார்கள்?
3. பாலும் தேனும் ஒழுகிற தேசம் எது?
4. கிறிஸ்து என்னும் இரட்சகர் எங்கே பிறந்திருக்கிறார்?
5. கர்த்தருக்கு எதை செவ்வைபண்ண வேண்டும்?

II. சரியா ? தவறா ? (5 கேள்விகளுக்கு மட்டும்) (5x2=10)

1. தேவனின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தையினால் தூதன் பிழைப்பான்.
2. மனம் திரும்பினால் மன்னிப்பும் இரட்சிப்பும் கிடைக்கும்.
3. 40 நாட்கள் பூமியின் மேல் இரவும் பகலும் பெருமழை பெய்தது.
4. வஸ்தி ராணி மகா ரூபவதியாக இருந்தாள்.
5. தேவதூதன் பேதுருவை தலையிலே தட்டி எழுப்பினார்..
6. சேராபீன்களுக்கு இரண்டு சட்டைகள் உண்டு.
7. நாகமான் சுகம் அடைவதற்கு சிறு பெண் காரணமாக இருந்தாள்..

III. யார்? யாரிடம் சொன்னது? (ஏதேனும் 5 மட்டும்) (5x2=10)

1) நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம்.
2) பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு இருக்கிறார்.
3) கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?
4) இங்கே உனக்கு என்ன காரியம்?
5) சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.
6) எருசலேமின் அலங்கத்தை கட்டுவோம் வாருங்கள்.

IV. மனப்பாட வசனங்கள் (ஏதேனும் 5 மட்டும்) (5x3=15)

(1) நல்ல ரசம் .... சங்கீதம் 34:8 (2) நல்ல செய்தி .... நீதிமொ 15:30
(3) பணிவிடை செய்து சிறுவன் .... மத்தேயு 20:26.
(4) பர்வதத்தில் நில்.... எசேக் 2:1 (5) எதிர்த்து நில் .... யாக்கோபு 4:7
(6) தேவனின் பாதுகாப்பு .... சங்கீதம் 121:5
(7) கீழ்ப்படிய ஆசை .... எபேசியர் 6:1

V. வண்ணமிடுதல் & வித்தியாசங்களை கண்டுபிடித்தல். (2x5=10)

(1) தாவீது கோலியாத்தை வீழ்த்தும் படத்திற்கு வண்ணமிடுக.
(2) மாறியுள்ள படத்தை எண்களால் வரிசைப்படுத்தவும்.

Contact +91 9865587888, +91 7397497273

பிள்ளைகள் பாடங்களை எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள் தெரியுமா?

1. பார்ப்பதினால்

ஒரு காரியத்தை வாசிப்பதினால் 10% தான் கற்றுக் கொள்கிறார்கள்.

2. கேட்பதினால்

கேட்பதினால் 20% கற்றுக் கொள்கிறார்கள்.

பார்ப்பதினால் 30% கற்றுக் கொள்கிறார்கள்.

3. தொடுவதால்

பார்த்து கேட்பதினால் 50% கற்றுக் கொள்கிறார்கள்.

பார்த்து, கேட்டு, திரும்பச் சொல்வதினால் 70% கற்றுக் கொள்கிறார்கள்.

4. ருசிப்பதால்

அதனை செய்து பார்ப்பது மூலமாக 90% கற்றுக் கொள்கிறார்கள்.

ஞாயிறு பள்ளி மாணவர்களின் பிறந்த நாட்கள்

வ எண்	மாணவர்களின் பெயர்கள்	இனம் ஆ/பெ	பிறந்த நாட்கள்	தொலைபேசி எண்கள்
1				
2				
3				
4				
5				
6				
7				
8				
9				
10				
11				
12				

ஆசிரியர்கள் மாணவர்களின் பிறந்த நாளில் அவர்களை வாழ்த்தி, வாக்குத்தத்த வசனங்களை கொடுத்து, விசேஷித்த ஜெபம் செய்யவேண்டும்.

கூடுமானால் சிறிய பரிசுப் பொருளை வழங்கி அவர்களை சந்தோஷப்படுத்தலாம்.

Contact +91 9865587888, +91 7397497273

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	நவம்பர்					டிசம்பர்				
1											
2											
3											
4											
5											
6											
7											
8											
9											
10											
	மொத்த வருகை										
	ஆசிரியர் கையொப்பம்										

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	செப்டம்பர்					அக்டோபர்				
1											
2											
3											
4											
5											
6											
7											
8											
9											
10											
	மொத்த வருகை										
	ஆசிரியர் கையொப்பம்										

Contact +91 9865587888, +91 7397497273

ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான கையேட்டின் சிறப்பம்சங்கள்

ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான கையேடு என்பது, ஞாயிறு பள்ளி பாடங்களை எவ்வாறு கற்பிப்பது, எவ்வாறு மாணவர்களுடன் தொடர்பு கொள்வது, பாடங்களை எவ்வாறு தயார்படுத்துவது போன்ற வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய ஒரு சிறந்த கருவியாகும்.

ஞாயிறு பள்ளி ஆசிரியர் கையேட்டின் முக்கிய கூறுகள்:

பாடத்திட்டம்:

ஞாயிறு பள்ளி பாடங்களை சிறப்பாக திட்டமிட்டு, மிகுந்த ஜெபத்துடன் எவ்வாறு கற்பிப்பது என்பது பற்றிய வழிகாட்டுதல்கள்.

கற்பிக்கும் முறைகள்:

பல்வேறு கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பது பற்றிய பல தகவல்களை உள்ளடக்கியது.

பாடப் பொருள்கள்:

பல்வேறு பாடப் பொருள்களின் சுருக்கம் மற்றும் ஆசிரியர்கள் எவ்வாறு பாடப் பொருள்களை தயார்படுத்துவது என்பது பற்றிய சிறந்த வழிகாட்டுதல்கள்.

மாணவர்களுடன் தொடர்பு:

மாணவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும், அவர்களின் கேள்விகளுக்கு எவ்வாறு பதில் அளிப்பது, அவர்களின் சந்தேகங்களை எவ்வாறு நீக்குவது என்பது பற்றிய வழிகாட்டுதல்கள்.

மதிப்பீடு:

மாணவர்களின் கற்றலை எவ்வாறு மதிப்பிடுவது என்பது பற்றிய வழிகாட்டுதல்கள்.

ஆசிரியர் தகுதி:

ஆசிரியர்கள் சிறுவர் ஊழியத்தில் தங்களை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது பற்றிய வழிகாட்டுதல்கள்.

ஞாயிறு பள்ளி ஆசிரியர் கையேட்டின் மூலம்:

1. ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும்,
2. மாணவர்கள் பாடங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்
3. ஞாயிறு பள்ளி வகுப்புகள் சுவாரஸ்யமாக இருக்கும்.
4. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல உறவு ஏற்படும்.

இயேசு கற்பித்தது போல் கற்பியுங்கள்

இயேசு உறவுமுறை உள்ளவராக இருந்தார்.

இயேசு சிறந்த கேள்விகளைக் கேட்டு அர்த்தமுள்ள உரையாடல்களை உருவாக்கினார். மேலும் தனது போதனையை தனிப்பட்டதாகவும், புரிந்து கொள்ளும் விதத்தில் எளிமையாகவும் மாற்றினார். மக்கள் தன்னைப் பற்றி அறிந்திருப்பதில் இயேசு திருப்தி அடையவில்லை. அவர்கள் தன்னை பின்தொடர வேண்டும் என்று அவர் மிகவும் விரும்பினார். உங்கள் வகுப்பில் குழந்தைகளுடன் நீங்கள் சிறந்த நட்புறவை ஏற்படுத்தி, இயேசுவுடன் நெருங்கி வளரும் நட்பிற்கு அவர்களை ஜெபத்துடன் வழிநடத்துங்கள்.

இயேசு அனுபவங்களினால் உருவாக்கினார்.

பார்வையற்ற ஒரு மனிதனின் கண்களில் இயேசு சேற்றைத் தேய்த்தது நினைவிருக்கிறதா? அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது - அன்றும் இன்றும், என்றும் புரிதலை உறுதிப்படுத்த, மக்கள் ஒரு மறக்கமுடியாத அனுபவத்தைப் பெற வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். இதனால்தான் ஆசிரியர் ஒவ்வொரு வகுப்புகளிலும், பாடத்திட்டத்திலும் சுவாரஸ்யமான மற்றும் அவர்கள் மனம் கவரும் செயல்பாடுகளைக் செய்து காட்டவேண்டும்.

இயேசுவின் போதனைகள் பொருந்தக்கூடியவை.

இயேசு தம்முடைய போதனையைக் கேட்பவர்கள் விசுவாசத்தில் வளர வேண்டும் என்று எதிர்பார்த்தார். குழு பாடத்திட்டத்தில் நீங்கள் காணும் நடைமுறை பயன்பாடுகள் உங்கள் குழந்தைகள் தங்கள் விசுவாசத்தை அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்த உதவுகின்றன. பைபிள் சம்பவம் உண்மை என்பதைக் கண்டுபிடிப்பார்கள். உங்கள் வேத போதனைகள் அவர்களை சிறந்த சாதனையாளர்களாக மாற்றும்.

மனமாற்றம் என்பதே இயேசுவின் குறிக்கோள்

போதிக்கப்பட்ட போதனையும், அதின் மேலுள்ள மக்கள் நம்பிக்கையும் அவர்கள் தலையிலிருந்து இதயத்திற்கு நகர்வதைக் கண்டு இயேசு மகிழ்ச்சியடைந்தார். உங்கள் குழந்தைகள் இயேசு உண்மையானவர் என்பதையும், பரலோக தேவன் அவர்களுக்காக ஒரு திட்டத்தை வைத்திருப்பதையும் உணரும்போது, அவர்களின் தலையில் மின்விளக்குகள் எரிவதைப் (முகங்கள் பிரகாசிப்பதை) பார்க்கும்போது நீங்கள் அதே மகிழ்ச்சியை உணர்வீர்கள். சிறுவர் ஊழியத்தில் பெரிய அறுவடைகளை காண்பீர்கள்.

Contact +91 9865587888, +91 7397497273

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	ஜூலை					ஆகஸ்ட்				
1											
2											
3											
4											
5											
6											
7											
8											
9											
10											
	மொத்த வருகை										
	ஆசிரியர் கையொப்பம்										

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	மே						ஜீன்					
1													
2													
3													
4													
5													
6													
7													
8													
9													
10													
	மொத்த வருகை												
	ஆசிரியர் கையொப்பம்												

Contact +91 9865587888, +91 7397497273

வகுப்பில் ஆசிரியரின் பணிகள்

பாட வேளை - (60 நிமிடங்கள்)

இடத்தை ஆயத்தம் செய்தல்	(3 நிமிடங்கள்)
பிள்ளைகளை அமரச்செய்தல்	(5 நிமிடங்கள்)
துவக்க ஜெபம்	(2 நிமிடங்கள்)
பொதுவான உரையாடல்	(3 நிமிடங்கள்)
வருகைப் பதிவு	(5 நிமிடங்கள்)
பாடம் நடத்துதல்	(15 நிமிடங்கள்)
தீர்மானம் எடுக்கவைத்தல்	(5 நிமிடங்கள்)
புத்தகப்பணிகள்	(15 நிமிடங்கள்)
வசனம் மனனம் செய்தல்	(5 நிமிடங்கள்)
இறுதி ஜெபம்	(2 நிமிடங்கள்)

ஆசிரியரின் கவனத்திற்கு

Primary பிள்ளைகளுக்கான வேதபாடங்களை 50 வாரங்கள் (ஞாயிற்று கிழமைகள்) போதிக்கவும். ஒரு பாடத்தை இரண்டு ஞாயிறு பாடசாலை வகுப்புகளில் நடத்தி முடிக்க வேண்டும். **மாணவர்களின் பயிற்சி புத்தகத்தை** அந்த வாரமே சரிபார்த்து, பிழை திருத்தம் செய்து, கையொப்பமிடுதல் வேண்டும்

வரிசை எண்	பாடத்தின் தலைப்புகள்	பக்கம் எண்
1.	பாதுகாக்கும் தேவன்	13
2.	சமாதானத்தின் தேவன்	16
3.	விடுவிக்கும் தேவன்	19
4.	சுகம் தரும் தேவன்	22
5.	விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்	24
6.	ஞானவானாயிருங்கள்	27
7.	விழித்திருங்கள்	29
8.	கர்த்தரின் வேளைக்காக காத்திருங்கள்	31
9.	நல்ல மேய்ப்பன்	33
10.	நல்ல பங்கு	35
11.	நல்ல கனி	37
12.	நல்ல சமாரியன்	39
13.	சந்தோஷமாயிருங்கள்	41
14.	உண்மையாயிருங்கள்	43
15.	பரிசுத்தமாயிருங்கள்	45
16.	கீழ்படிந்திருங்கள்	47
17.	பத்து கற்பனைகள்	49
18.	பத்து வாதைகள்	51
19.	பத்து குஷ்டரோகிகள்	53
20.	பத்து கன்னிகைகள்	55
21.	இயேசுவைப் பார்க்க ஆசை	57
22.	தேவனுக்குக் கொடுக்க ஆசை	59
23.	தேவனோடு பேச ஆசை	61
24.	இயேசுவோடு நடக்க ஆசை	63
25.	இயேசுவைப்போல் ஜெபிக்க ஆசை	65

Contact +91 9865587888, +91 7397497273

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	மார்ச்					ஏப்ரல்					
1												
2												
3												
4												
5												
6												
7												
8												
9												
10												
	மொத்த வருகை											
	ஆசிரியர் கையொப்பம்											

வருகைப் பதிவேடு (வருடம் .....)

வ எண்	பிள்ளைகளின் பெயர்	ஜனவரி					பிப்ரவரி				
1											
2											
3											
4											
5											
6											
7											
8											
9											
10											
	மொத்த வருகை										
	ஆசிரியர் கையொப்பம்										

Contact +91 9865587888, +91 7397497273

1. பாதுகாக்கும் தேவன்

மனனவசனம்: மத்தேயு 28:20(b) **வேதபகுதி:** தானியேல் 3:1-30

பாடத்தின் கருப்பொருள்:

தேவன் ஆபத்துகளில் பாதுகாப்பவராக இருக்கிறார்.

பாடத்தின் நோக்கம்:

தேவன் தமது பிள்ளைகளை செட்டைகளின் மறைவில் வைத்து, கண்மணிபோல பாதுகாக்கிறார் என்பதை பற்றி அறிதல்.

பாடச்சுருக்கம்:

பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஆறுபது முழம் உயரமும், ஆறு முழம் அகலமுமான பொற்சிலையைப்பண்ணி தூரா என்னும் சமவெளியில் நிறுத்தினான். கீதவாத்தியங்கள், நாதசுரம், தம்புரு, வீணை முழங்க தேசாதிபதிகள், அதிகாரிகள், தலைவர்கள் மற்றும் அந்த தேசத்தில் உள்ள அனைவரும் பொற்சிலையை வணங்க வேண்டும் என்பது ராஜாவின் உத்தரவாக இருந்தது.

கீதவாத்தியங்கள் அனைத்தும் முழங்கும் போது எல்லோரும் வணங்கினார்கள். ஆனால் பாபிலோன் மாகாணத்தில் காரியங்களை விசாரிக்கும்படி ஏற்படுத்தின சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் பொற்சிலையை பணிந்து கொள்ளவில்லை. உங்களை தப்புவிக்கப் போகிற தேவன் யார் என்றான். நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். எரிகிற அக்கினிச் சூளைக்கும், உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்றார்கள். இதைக் கேட்ட ராஜா மூவரையும் அக்கினிச் சூளையில் போடும்படி உத்தரவிட்டார்.

எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். சூளை 7 மடங்கு அதிகமாக சூடாக்கப்பட்டது. அக்கினிச் சூளையானது இந்த மூவரையும் தூக்கிக் கொண்டுபோன புருஷரைக் கொன்று போட்டது. ஆனால் தீயினுள் போடப்பட்டவர்கள் உயிர் பிழைத்தனர். அக்கினிச் சூளையின் நடுவில் நான்கு பேர் உலாவுகிறதை ராஜா கண்டார். நான்காம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருந்தது. ராஜா அந்த மூன்று பேரையும் அழைத்தார். அவர்கள் சாதாரணமாக வெளியே வந்தனர். தலைமயிர் கருகவில்லை. ஆடைகள் சேதமடையவில்லை. தீயின் மணம் அவர்களிடம் இல்லை. நேபுகாத்நேச்சார் உண்மையான தேவனை கண்டு கொண்டவுடன் அவரை புகழும் பண்பு காணப்பட்டது. விசுவாசத்தில் உறுதியாக நின்றார்கள். தேவன் அவர்களை பாபிலோன் தேசத்திலே உயர்த்தினார். அவர்கள் மூவரும் விழுந்தது தீயில் அல்ல, தேவனுடைய பாதுகாக்கும் கரத்தில் என்ற உண்மையை விளங்கச் செய்கிறது.

பாடப்பகுதியிலிருந்து கற்றுக்கொள்பவைகள்:

1. ஜீவனுள்ள தேவன் மீதான அசைக்க முடியாத நம்பிக்கை:
2. தங்களுடைய தேவன் தங்களை காப்பாற்றுவார் என்று உறுதியாக நம்பினார்கள்.
3. நேபுகாத்நேச்சார் ராஜா போட்ட கட்டளைக்கு பயப்படாமல், தங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்கள்.
4. சோதனைகளை தைரியமாக எதிர்கொள்வது:
5. தேவனின் வல்லமையை நம்புவது:
6. அவர்கள் நெருப்பு சூளையில் போடப்பட்டும், கடவுள் தேவன் காப்பாற்றினார்.
7. சவால்களை தைரியமாக எதிர்கொள்ளுதல்:
8. ராஜா மற்றவர்கள் முன்னால் அவர்களை அவமானப்படுத்தி னாலும், அவர்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கவில்லை.
9. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் ஒருவருக் கொருவர் ஆதரவாக இருந்தார்கள். இது ஒருவரை ஒருவர் பலப்படுத்த உதவுகிறது.

இந்த பாடங்கள் நமது வாழ்க்கையில் நாம் எந்த சூழ்நிலையை எதிர்கொண்டாலும், தேவன் மீது நம்பிக்கை வைத்து, தைரியமாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கிறது.

Contact +91 9865587888, +91 7397497273

ஞாயிறு பள்ளி மாணவர் வருகைப் பதிவேடு

2. சமாதானத்தின் தேவன்

மனனவசனம்: சங்கீதம் 121:5 **வேதபகுதி:** அப் 12:1-16

பாடத்தின் கருப்பொருள்:

தேவன் தரும் மெய்யான சமாதானம்.

பாடத்தின் நோக்கம்:

தனித்துவிடப்பட்ட, பயத்துடன் வாழ்ந்த யாக்கோபு தேவனிடம் பெற்றுக்கொண்ட சமாதானத்தைக் குறித்து கற்றுக்கொள்ளுதல்.

பாடச்சுருக்கம்:

யாக்கோபு சமாதானமில்லாத சூழ்நிலையில் பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணும் பொழுது தேவனைத் தரிசித்தல்:

"யாக்கோபு - ஏமாற்றுகிறவன்" என்று அர்த்தம். யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணும் பொழுது ஒரு இடத்திலே வந்த போது சூரியன் அஸ்தமித்தபடியினால் இரவிலே அந்த இடத்திலே தங்கி அங்கிருந்த கற்களில் ஒன்றை எடுத்து தலையில் கீழ் வைத்து படுத்து நித்திரை செய்தான். அங்கே ஒரு சொப்பனம் பார்த்தான். ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனிப்பகுதி வானத்தை எட்டியிருந்தது. அதில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும், இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

கர்த்தர் அதற்கு மேலாக நின்று யாக்கோபிடம் நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன் என்றார். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும். உன் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்றார். நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உனக்கு சமாதானம் தந்து, காத்து இந்த தேசத்துக்கு திரும்பிவரப்பண்ணுவேன் என்றும் நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடாதிருப்பேன் என்றார்.

Contact +91 9865587888, +91 7397497273

25. இயேசுவைப்போல் ஜெபிக்க ஆசை

மனன வசனம்: மத்தேயு 26:41 **வேதபகுதி:** மாற்கு 14:32-40

பாடத்தின் கருப்பொருள்:

ஜெபமே ஜெயம்.

பாடத்தின் நோக்கம்:

ஜெபிப்பதால் கிடைக்கும் தேவனின் ஒத்தாசை, உன்னதமான பெலன் குறித்து கற்று அறிதல்.

பாடச்சுருக்கம்:

இயேசுவும், சீஷர்களும் கெத்சமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி; பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டுபோய், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது, இயேசு: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக்கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்.

பின்பு, இயேசு வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக்கண்டு, பேதுருவை நோக்கி: சீமோனே, நித்திரை பண்ணுகிறாயா? ஒரு மணி நேரம் நீ விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

வீட்டுப்பாடம்:

1. மனனவசனத்தைப் படித்து பிழையின்றி எழுதி வரவும்.
2. பயிற்சி புத்தகத்தில் உள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை எழுதி வரவும்.
3. படத்திற்கு மிக அழகாக வண்ணமிடவும்

ஆசிரியர் குறிப்புகள்

Contact +91 9865587888, +91 7397497273

24. இயேசுவோடு நடக்க ஆசை

மனன வசனம்: 1யோவான்2:6 **வேதபகுதி :** லூக்கா 24:13-35

பாடத்தின் கருப்பொருள்:

இயேசுவோடு நடத்தல்

பாடத்தின் நோக்கம்:

இயேசுவோடு நடந்தால், நாம் செல்லும் பாதைகளில் அவரது பாதுகாப்பு உண்டு என்பதை கற்பித்தல்.

பாடச்சுருக்கம்:

இயேசுவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியின் முக்கியமான உண்மைகளில் ஒன்று. இயேசு உயிர்த்தெழுந்த பின் அநேகருக்கு காட்சியளித்துப் பேசினார். காட்சியளித்த விபரம் (1) மகதலேனா மரியாளுக்கு (2) கல்லறையில் இருந்து திரும்பி வந்த பெண்களுக்கு (3) பேதுருவுக்கு (4) எம்மாவூருக்குப் போகும் வழியில் இரண்டு சீஷர்களுக்கு இதுதவிர இன்னும் அநேகம் பேருக்கு காட்சியளித்தார்.

எம்மாவு என்ற கிராமத்துக்கு நடந்து போன இரண்டுபேர் கூட இயேசுவும் நடந்து போனார். இயேசுவை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி நீங்கள் துக்கமுகமாய் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளும் காரியம் என்ன என்று கேட்டார். அதற்கு அவர்கள் எருசலேமில் நடந்தவைகளை அறியாத அந்நியராயிருக்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு எவைகள்? என்றார். அதற்கு அவர்களது பதில் இயேசுவைக் குறித்தவைகள். அவர் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசி என்றார்கள்.

பிரதான ஆசாரியரும், அதிகாரிகளும் குற்றமில்லாத இயேசுவை மரண ஆக்கினைக்கு உட்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். இவைகள் சம்பவித்து மூன்று நாள் ஆகிறது என்றார்கள். ஸ்திரீகளில் சிலர் கல்லறை இடத்திற்குப் போய் அவருடைய சரீரத்தைக் காணாமல் திரும்பிய பொழுது அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதர்களைத் தரிசித்தோம் என்று சொல்லி பிரமிக்கப்பண்ணினார்கள் என்று சொன்னார்கள்.

சிறைச்சாலைக்காரன் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்கள் என்று எண்ணி, பட்டயத்தை உருவி கொலை செய்து கொள்ளப் போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு நீ உனக்கு கெடுதி ஒன்றுஞ்செய்யாதே, நாங்கள் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.

சிறைச்சாலைக்காரன் நடுநடுங்கி அவர்களுக்கு முன்பாக விழுந்து அவர்களை வெளியே அழைத்து, ஆண்டவமாரே நான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய (வார்த்தையை) வசனத்தைப் போதித்தார்கள். அனைவரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள். பின்பு அவன், அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் போஜனங் கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடும் கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

ரோமக்குடிமக்களுக்குச் சிறப்பான சலுகைகள் இருந்தன. எனவே அதிகாரிகள் பயப்பட்டனர். பவுலையும், சீலாவையும் விடுவித்தார்கள். பொய்யாகக் குற்றம் சாட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. மனிதனின் நீதி குறைவுள்ளது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

கலந்துரையாடல்: (ஆசிரியர் - மாணவர்களுடன்)

1. விடுதலை என்றால் என்ன?
2. எவைகளில் நமக்கு விடுதலை தேவை? ஏன்?
3. சிறைச்சாலை பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
4. பாவ, சாபத்தில் விடுதலை பெற நாம் செய்யவேண்டியது என்ன?

மனன வசனம்:

குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.
(யோவான் 8:36)

கற்றுகொடுக்க வேண்டிய பாடல்

Kids For Christ
Sunday School Song

ஜிம்பாலே ஜிம்பாலே....

Contact +91 9865587888, +91 7397497273

23. தேவனோடு பேச ஆசை

மனன வசனம்: I சாமுவேல் 3:10 **வேதபகுதி:** I சாமுவேல் 3:1-10

பாடத்தின் கருப்பொருள்:

சாமுவேலுடன் தேவனின் உரையாடல்.

பாடத்தின் நோக்கம்:

தேவனாகிய கர்த்தர் தரிசனங்கள், சொப்பனங்கள் மூலமாக நம்முடன் பேசுகிறவர் என்பதை தெளிவுபடக் கற்பித்தல்.

பாடச்சுருக்கம்:

சாமுவேல் எப்பிராயீம் கோத்திரத்தின் ஒரு நியாயாதிபதி. ஒரு தீர்க்கதரிசி. இவன் பிறப்பதற்காக இவனுடைய தாய் கண்ணீரோடும், பொருத்தனையோடும் தேவாலயத்தில் வந்து விண்ணப்பம் செய்தாள். சாமுவேல் பிறந்த பின்பு அவன் தாயாகிய அன்னாள் தான் செய்த பொருத்தனையின்படியே தேவாலயத்தில் கொண்டு வந்து ஏலியிடம் ஒப்படைத்தாள். சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானை வயது முதிர்ந்த ஆசாரியனாகிய ஏலி வளர்த்து ஆலயப்பணிகளில் பயிற்சி அளித்தார்.

கர்த்தரின் குரலைக் கேட்கும் காதுகள் பாக்கியமுள்ளவை. கர்த்தருடைய வசனம் அபூர்வமாக இருந்த காலத்தில் சாமுவேலே என்ற அழைப்பு வந்தது. மக்களைத் தேவ வழியில் நடத்த, அனுதினமும் அவரது குரலைக் கேட்கும் காதுகள் கொண்ட ஆசாரியர் இல்லாததால் தான் கர்த்தரின் வசனம் அபூர்வமானது. சாமுவேலின் வளர்ச்சிக்காகக் கர்த்தர் காத்துக் கொண்டிருந்தார்.

ஆலயத்தில் ஏலி தன்னுடைய ஸ்தானத்தில் படுத்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்கள் இருளடைந்திருந்தது. தேவனுடைய பெட்டி இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய விளக்கு அணையும் முன்னே சாமுவேலும் படுத்துக் கொண்டார். கர்த்தர் சாமுவேலை இரண்டு தடவை கூப்பிடும் பொழுது கர்த்தரை அறியாதிருந்தார். கர்த்தருடைய வார்த்தையும் இன்னும் வெளிப்படவில்லை. எனவே, ஏலியிடம் போய் என்னைக் கூப்பிட்டீரே என்றார். அதற்கு ஏலி நான் கூப்பிடவில்லை.

4. சுகம் தரும் தேவன்

மனப்பாட வசனம்
நீதிமொழிகள் 18:10

வேதபகுதி
யோவான் 5:1-9

பாடத்தின் கருப்பொருள்:

தேவன் சுகமளிக்கிறவர். **(யெகோவா ரா.'.பா)**

பாடத்தின் நோக்கம்:

சுகமில்லாதவர்களுக்கு சுகம் தந்து, உதவியற்றவர்களுக்கு உதவி செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதை வலியுறுத்தல்.

பாடச்சுருக்கம்:

யூதருடைய பண்டிகையின்போது இயேசு எருசலேமுக்குப் போனார். அந்த எருசலேம் பட்டணத்திற்கு பல வாசல்கள் இருந்தது. அவைகளில் ஒரு வாசலுக்கு ஆட்டுவாசல் என்று பெயர். அந்த வாசலின் பக்கத்தில் பெதஸ்தா குளம் இருந்தது. அதற்கு ஐந்து மண்டபங்கள் உண்டு. அவைகளில் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையோர் ஆகிய வியாதிக்காரர்கள் படுத்திருப்பார்கள். சில சமயங்களில் ஒரு தேவதூதன் அந்த குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முதலில் அதில் இறங்குவானோ அவன் எப்படிப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். முப்பத்தெட்டு வருஷம் வியாதிப்பட்டிருந்த ஒருவன் அங்கே படுத்திருந்தான். இயேசு அங்கே வந்த போது நீண்ட நாட்களாய் வியாதியாய் இருந்த அவனைப் பார்த்து சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு அவன் ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும் போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை. நான் போகிறதற்குள்ளே வேறொருவன் முந்தி இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு அவனைப் பார்த்து "எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்றார். உடனே அவன் சுகம் பெற்று தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது.

Contact +91 9865587888, +91 7397497273

22. தேவனுக்குக் கொடுக்க ஆசை

மனன வசனம்: II கொரிந்தியர் 9:7

வேதபகுதி: லூக்கா 21:1-4

பாடத்தின் கருப்பொருள்:

தேவனுக்கு கொடுப்பது பாக்கியம்.

பாடத்தின் நோக்கம்:

தேவனுக்கு கொடுக்கும் காணிக்கையை நாம் எந்த சூழ்நிலையில், எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதை கவனிக்கிறார் என்பதை கற்று அறிதல்.

பாடச்சுருக்கம்

தேவன் எவ்வாறு காணிக்கை செலுத்துவதை மதிப்பீடு செய்கிறார் என்பதைப் பற்றிய ஒரு பாடத்தை இயேசு கற்பிக்கிறார். காணிக்கை செலுத்தும் போது அவர்கள் செலுத்தும் காணிக்கையைக் கொடுப்பதன் மூலம் அவர்கள் எவ்வளவு தியாகம் செய்துள்ளார்கள் என்பது முக்கியம். ஐசுவரியவான்கள் தங்களுக்குத் திரளாக உள்ள ஆஸ்தியில் ஒரு பங்கைக் கொடுக்கிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யவில்லை. அந்த விதவையின் காணிக்கை அப்படியல்ல. அவளிடம் இருந்த அனைத்தையும் கொடுத்து விட்டாள். நாம் கொடுக்கும் காணிக்கை எவ்வளவு என்பதைவிட அர்ப்பணிப்பு, தியாகம், உண்மை, விசுவாசம், அன்பு ஆகியவைகளை வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய மனப்பான்மை முக்கியம். தேவனை நேசிப்பதாலும், அவருக்கு உளமார நன்றி செலுத்துவதாலும், உற்சாகமாக கொடுப்போமாக.

தன் வாழ்க்கைக்குரிய யாவற்றையும் தேவனுக்குக் கொடுத்துவிட்டாலும், தேவன் தன்னை ஆதரித்து பராமரிப்பார் என்ற விசுவாசத்துடன் அந்த ஏழை விதவை காணிக்கை செலுத்தினாள். ஏழைப் பெண் போட்டது இரண்டு காசாக இருந்தாலும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டது. உற்சாகமாய் கொடுக்கிறவர்களிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்.

கலந்துரையாடல்: (ஆசிரியர் - மாணவர்களுடன்)

1. இரட்சிப்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?
2. இயேசுவைப் பார்க்க உங்களுக்கு ஆசை உண்டா? இயேசுவை நீங்கள் பார்த்தால் என்னவெல்லாம் பேசுவீர்கள்?
3. உங்கள் வீட்டில் இயேசு (பிரசன்னம்) தங்குவதற்கு இடம் உண்டா

நல்ல தீர்மானங்கள் எடுக்க வைத்தல்:

1. என் ஜெபநேரத்தில் நான் இயேசுவை சந்திப்பேன்.
2. சகேயுவைப் போல பாவத்தை விட்டு மனந்திரும்புவேன்.
3. இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வேன்.
4. என் உள்ளத்திலும், இல்லத்திலும் இயேசு தங்குவதற்கு இடம் கொடுப்பேன்.

மனன வசனம்:

கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்;
அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.
(சங்கீதம் 105:4)

வீட்டுப்பாடம்:

1. மனனவசனத்தைப் படித்து பிழையின்றி எழுதி வரவும்.
2. பயிற்சி புத்தகத்தில் உள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை எழுதி வரவும்.

கற்றுகொடுக்கவேண்டிய பாடல்.

Kids For Christ
Sunday School Song

குள்ள சகேயு .....

Contact +91 9865587888, +91 7397497273

கலந்துரையாடல்: (ஆசிரியர் - மாணவர்களுடன்)

1. சுகவீனம் வந்தால் உடனே நாம் செய்யும் காரியங்கள் என்ன?
2. மருத்துவரின் பணிகள் என்ன?
3. சுகவீனமாக இருப்பவர்களுக்கு என்ன வாக்குத்தத்த வசனங்களை சொல்லி ஜெபிப்பீர்கள்?
4. ஆரோக்கியமாக வாழ என்ன செய்யவேண்டும்?

நல்ல தீர்மானங்கள் எடுக்க வைத்தல்:

1. பெலவீனத்தோடு இருப்பவர்களுக்கு ஜெபிப்பேன்.
2. தேவன் எனக்கு தந்த சுகத்திற்காக நன்றி சொல்வேன்.
3. ஆரோக்கியமான உணவுகளை மட்டுமே சாப்பிடுவேன்.
4. எந்த வியாதியையும் போக்க இயேசு சர்வவல்லவர் என்பதை விசுவாசித்து அறிக்கை செய்வேன்.

மனன வசனம்:

கர்த்தரின் நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.
(நீதிமொழிகள் 18:10)

வீட்டுப்பாடம்:

1. மனனவசனத்தைப் படித்து பிழையின்றி எழுதி வரவும்.
2. பயிற்சி புத்தகத்தில் உள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை எழுதி வரவும்.

கற்றுகொடுக்கவேண்டிய பாடல்.

Kids For Christ
Sunday School Song

12 வருஷமா 38 வருஷமா....

மறுநாள் அந்த சமாரியன் புறப்படும் போது இரண்டு பணத்தை, சத்திரக்காரனிடம் கொடுத்து, இவனை விசாரித்துக் கொள். அதிகமாய் செலவழித்தால் திரும்பி வரும்போது தருவேன் என்றான். இயேசு நியாயசாஸ்திரியிடம் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு யார் பிறனாயிருந்தான் என்றார். அதற்கு அவன் இரக்கம் செய்தவனே என்றான். நீயும் போய் அந்தப்படியே செய் என்றார். பிறனாக மாறும் போது தியாகங்கள் இயல்பானவை. தியாகமின்றி பிறன் என்ற உறவு இல்லை.

கலந்துரையாடல்: (ஆசிரியர் - மாணவர்களுடன்)

1. தனிமையில் பயணம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் என்ன?
2. ஆசாரியன், லேவியனின் பணிகள் என்ன?
3. சத்திரம் என்றால் என்ன?
4. விபத்தில் காயப்பட்டவர்களுக்கு எப்படி முதலுதவி செய்யலாம்?

நல்ல தீர்மானங்கள் எடுக்க வைத்தல்:

1. தேவையில் இருப்போருக்கு நன்மைகள் செய்வேன்.
2. தனிமையாக பிரயாணம் செய்யமாட்டேன்.
3. சுயநலமின்றி பிறர்க்கு சேவை செய்வேன்.

மனன வசனம்:

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
(சங்கீதம் 34:8)

வீட்டுப்பாடம்:

1. பயிற்சி புத்தகத்தில் உள்ள கேள்விகளுக்கும் சரியான பதிலை எழுதி வரவும்.

கற்றுகொடுக்க வேண்டிய பாடல்

Kids For Christ
Sunday School Song

நல்ல சமாரியன்.....

Contact +91 9865587888, +91 7397497273

13. சந்தோஷமாயிருங்கள்

மனனவசனம்: பிலிப்பியர் 4:4 **வேதபகுதி: லூக்கா 15:4-10**

பாடத்தின் கருப்பொருள்:

காணாமல்போனதும், இழந்துபோனதும்.

பாடத்தின் நோக்கம்:

காணாமல்போனதையும், இழந்துபோனதையும் கண்டுபிடித்தால் உண்டாகும் சந்தோஷத்தை கற்பித்தல்.

பாடச்சுருக்கம்:

உவமை 1 : காணாமற்போன ஆடு:-

ஒரு மனிதனுக்கு 100 ஆடுகள் இருந்தன. மேய்ச்சலின் போது அவைகளில் ஒன்று காணாமற் போனது. காணாமற்போன ஆட்டிற்குத் திரும்பி வர வழி தெரியாது காணாமற் போயிற்று. மீதி 99(தொண்ணூற்றொன்பது) ஆடுகளையும் தொழுவத்தில் பத்திரமாக வைத்துவிட்டு காணாமற்போன ஆட்டைத் தேட மேய்ப்பன் சென்றான். தேடி கண்டுபிடித்தான். கண்டுபிடித்த பின்பு சந்தோஷத்தோடே அதைத் தன் தோளின் மேல் போட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தான். சிநேகிதரையும், அயலகத்தாரையும் வரவழைத்து சந்தோஷப்பட்டான். அது போல மனந்திரும்ப அவசியமில்லாத 99 நீதிமான்களைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். ஒவ்வொரு ஆடும் மேய்ப்பனின் பார்வைக்கு விலையேறப்பெற்றது. அதுபோல ஒவ்வொரு ஆத்துமாவும் ஆண்டவருடைய பார்வைக்கு விலையேறப் பெற்றவர்கள்.

உவமை 2: காணாமற்போன வெள்ளிக்காசு:-

ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாய் இருந்தாள். அதில் ஒன்று காணாமற் போனது. அதைக் கண்டுபிடிக்க விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கி கண்டுபிடிக்கும் வரை ஜாக்கிரதையாகத் தேடுகிறாள். கண்டு பிடித்த பின்பு சிநேகிதிகளையும், அயல்வீட்டுக்காரிகளையும் அழைத்து சந்தோஷப்படுகிறாள். அது போல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனையும், தேவ தூதர்களையும் சந்தோஷமடையச் செய்கிறோம்.

ஆத்தும ஆதாயம் செய்வது எவ்வளவு சிறந்தது. சந்தோஷம் என்பதற்கு இவைகள் ஒரு ஆதாரமாகும்.